டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 30.08.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 061 - Madurai | Online Edition

# மத்திய அரசின் நடவடிக்கையால் வெங்காயம் கிலோ ரூ.35க்கு விற்பனை

புது தில்லி, ஆக.29

பருவமழை தாமதம் மற்றும் சில பகுதிகளில் குறைந்த மழைப் பொழிவு காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டு வெங்காயம் விலை உயர்ந்துள்ளது. தில்லி, சென்னை, கேரளா, அசாம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வெங்காய விலை அதிகரித்து கொண்டே இருக்கிறது.

வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. சிறப்பு நடவடிக்கையாக, கண்டா எனப்படும் சிறப்பு சரக்கு ரயில்களில் வெங்காயத்தை மத்திய அரசு முக்கிய நகரங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

சமீபத்தில் கண்டா எனப்படும் சிறப்பு சரக்கு ரயில்களில் டில்லிக்கு 500 டன் வெங்காயத்தை அனுப்பியதைத் தொடர்ந்து, நேற்று (ஆகஸ்ட் 29) தனது கையிருப்பில் இருந்து 840 டன் வெங்காயத்தை சென்னைக்கு மத்திய அரசு அனுப்பியுள்ளது.

மன்மாட் பகுதியில் வெங்காயம் ஏற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. பல நகரங்களில் சில்லறை விற்பனையில் வெங் காயத்தின் விலை கிலோவுக்கு ரூ.50 முதல் ரூ.65 வரை உயர்ந்த நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ரயில் போக்குவரத்து மட்டுமின்றி, இருப்பு வைக்கப்பட்ட வெங்காயத்தை சாலை வழியாக விநியோகிக்கும் நடவடிக்கையையும் மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த சில நாட்களில், இரண்டு லாரி டில்லி மற்றும் குவஹாத்திக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் பல நகரங்களுக்கும் சரக்குகளை அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. அதிக விலை நிலவும் சந்தைகளுக்கு விநியோகத்தை விரைவுபடுத்தவே ரயில் மற்றும் சாலை வழிப் போக்குவரத்து ஆகிய இரண்டும் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விலை உயர்வைத் தடுக்க, நாபெட் மற்றும் என்சிசிஎப் ஆகியவை மூலம் 1.21 லட்சம் டன் வெங்காயத்தை மத்திய அரசு கொள்முதல் செய்துள்ளது. கண்டா எக்ஸ்பிரஸ் வாயிலாக மத்திய அரசு அனுப்பி வைக்கும் வெங்காயம், நாபெட், என்சிசிஎப் மற்றும் கேந்திரிய பண்டார் விற்பனை நிலையங்கள் மூலம் கிலோவுக்கு ரூ.35 என்ற மானிய விலையில் விற்கப்படுகிறது.

தில்லி, சென்னையை தவிர எர்ணாகுளம், மதுரை மற்றும் குவஹாத்தி ஆகிய நகரங்களுக்கும் ரயில் மூலம் வெங்காயம் அனுப்பப்படலாம் என்று நுகர்வோர் விவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது. நாசிக்கில் உள்ள மொத்த விற்பனை விலையில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

நாட்டின் மிகப்பெரிய வெங்காயச் சந்தையான லாசல்கான் ஏ.பி.எம்.சி-யில், கடந்த நான்கு நாட்களில் சராசரி விலை 10% குறைந்துள்ளது; அதாவது குவிண்டாலுக்கு ரூ.4,250ஆக இருந்த விலை ரூ.3,800ஆகக் குறைந்துள்ளது. முக்கிய சந்தைகளுக்கு மத்திய அரசின் கையிருப்பில் இருந்து வெங்காயம் விடுவிக்கப் பட்டதே இந்த விலை சரிவிற்குக் காரணம் என்று வர்த்தகர்கள் கருதுகின்றனர்.

# தமிழகத்தில் செப்.3 வரை மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஆக.29

தமிழகத்தில் இன்று முதல் செப்.3-ம் தேதி வரை ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இன்று (ஆக.30) இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். 31-ம் தேதி தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

செப்.1 முதல் 3-ம் தேதி வரை வட தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும். 4-ம் தேதி தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை பயிற்சி



சிவகங்கை, ஆக.29

வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டாரம், பிரான்மலை கிராமத்தில் வேளாண்மை துணை இயக்குனர் செல்வம், தலைமையில் பயிற்சி நடைபெற்றது.

மேலும் இப்பயிற்சியில் அவர் கூறியதாவது, நெல் சாகுபடியில் மண் பரிசோதனை அடிப்படையில் அங்கக உரங்கள், இரசாயன உரங்கள் மற்றும் உயிர் உரங்களை ஒருங்கிணைத்து பயன் படுத்துவது ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை எனப்படு கிறது. இதன் மூலம் பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்ளை சரியான அளவில் வழங்குவதுடன், உரச்செலவையும் குறைக்க முடியும். விவசாயிகள் முதலில் மண் பரிசோதனை செய்து, மண் வள அட்டையின் பரிந்துரைப்படி உரமிட வேண்டும் என கூறினார்.

வேளாண்மை இணை இயக்குனர் (ஓய்வு) சுப்பிரமணியன், மீன் அமிலம், தொழுஉரம், பசுந்தாள் உரம், உயிர் உரங்கள், அசோஸ் பைரில்லம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்களைப் பயன்படுத்துவது மண் வளத்தை மேம்படுத்த உதவும் எனவும். பரிந்துரைக்கப்பட்ட பயிரின் வளர்ச்சிப் இரசாயன உரங்களை ஒரே முறையில் அதிகமாக இடாமல், அளவில் பிரித்து மேலுரமாக இடுவதன் மூலம் ஊட்டச்சத்து பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கலாம் என கூறினார். துணை வேளாண்மை அலுவலர் ப.சீனிவாசன், விவசாயிகளுக்கான நில உரிமை அடையாள எண் பதிவு செய்தார். வேளாண் இடு பொருட்கள் பற்றி கூறினார். நெற் பயிருக்கு தேவை யான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை பருவத்திற்கு ஏற்ப வழங்க வேண்டும் என்று கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.கிருஷ்ணசாமி, உர வீணாவதை குறைத்தல், உரச்செலவை குறைத்தல், மண் வளத்தை பாது காத்தல், ஊட்டச்சத்து பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையை கடைப்பிடித்து அதிக மகசூலும் அதிக வருமானமும் பெறலாம் என கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் அழகுசுந்தரம் ஊட்டச்சத்து மேலாண்மை செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**26. ராஜ்மா சூப்**

**தேவையான பொருட்கள்**

ராஜ்மா – 1 கப்

வெங்காயம் – 1

பூண்டு – 3 பல்

மிளகு தூள் – ½ டீஸ்பூன்

உப்பு – தேவையான அளவு

**செய்முறை**

ராஜ்மாவை வேக வைத்து அரைக்கவும். வெங்காயம், பூண்டு வதக்கி அரைத்த ராஜ்மாவை சேர்த்து 8 நிமிடம் கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# இந்தியாவில் காலநிலை மீள் திறனுக்கான நகர்ப்புற சூழலமைப்பு சார்ந்த தகவலமைப்பு முறைகள் பற்றிய சர்வதேச பயிலரங்கம்




கோயம்புத்தூர், ஆக.29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், பயிர் மேலாண்மை இயக்குநரகத்தின் கீழ் இயங்கும் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையமானது, 27 ஆகஸ்ட் 2026 அன்று இந்தியாவில் காலநிலை மீள் திறனுக் கான நகர்ப்புற சூழலமைப்பு சார்ந்த தகவலமைப்பு முறைகள் குறித்த சர்வதேசப் பயிலரங்கம் நடத்தப்பட்டது. இதில் காலநிலை மீள் திறன் கொண்ட நகர்ப்புற சூழலமைப்புகளை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள், விஞ்ஞானிகள் மற்றும் தொடர்புடைய பங்குதாரர்கள் ஆகியோர் பங்கேற்று அவர்களுடைய கருத்துக்கள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள இப்பயிலரங்கம் ஊக்குவித்தது.

தொடக்க அமர்வில், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி முதன்மையரும், பயிர் மேலாண்மை இயக்ககத்தின் பொறுப்பு இயக்குநருமான முனைவர் பி.ராஜ்குமார், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, பயிலரங்கத்தை தொடங்கி வைத்தார். நகர்ப் புறங்களின் காலநிலைமாற்றத்தாங்கு திறன்மிக்க திட்டமிடலில் அறிவியல் அணுகுமுறைகளையும் நிலைத்த தொழில்நுட்பங் களையும் ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத் தினார். இயற்கை வள மேலாண்மை இயக்குநர் முனைவர் எஸ்.கார்த்திகேயன், வளர்ந்து வரும் நகர்ப்புற சுற்றுச்சூழல் சவால்களை எதிர் கொள்வதில் இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் மற்றும் சூழலியல் அடிப்படையிலான அணுகுமுறைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். முன்னதாக, நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் ப.முரளி அர்த்தனாரி வரவேற்புரை வழங்கினார். மேலும் அ.பரணி, பேராசிரியர் மற்றும் தலைவர் சுற்றுச்சூழல் அறிவியல் துறை வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்.

திட்டத்தின் முதன்மை ஆய்வாளரும் சுற்றுச்சூழல் அறிவியல் பேராசிரியருமான முனைவர் எ.பரமேஸ்வரி, திட்டத்தின் கண்ணோட்டத்தையும், அதன் நோக்கங்களையும், காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய நகர்ப்புற வளர்ச்சியில் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். சுற்றுச்சூழல் அறிவியல் இணைப் பேராசிரியர் முனைவர் பி.கலைச்செல்வி நன்றியுரை வழங்கினார்.

காலநிலை மீள் திறன் கொண்ட இயற்கை வள மேலாண்மைக்கான புவிசார் தொழில்நுட்பங்கள், இயற்கையைச் சார்ந்த தீர்வுகள், நகர்ப்புற பல்லுயிர் மற்றும் பசுமை உள்கட்டமைப்பு, நகர்ப்புற நிர்வாகம், சமூகப் பங்கேற்பு மற்றும் நிலையான நகர்ப்புற காலநிலை நடவடிக்கை உள்ளிட்ட முக்கிய கருப்பொருள்களின் மீது தொழில்நுட்ப அமர்வுகள் கவனம் செலுத்தின. நகர்ப்புற பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் சூழலமைப்புச் சேவைகள், நகர்ப்புற காடுகள் வளர்ப்பு, பசுமை உள்கட்டமைப்பு, நகர்ப்புற நிர்வாகம், குறைந்த கார்பன் மற்றும் காலநிலை மீள் திறன் கொண்ட நகர்ப்புறத் திட்டமிடல், மற்றும் நிலையான நகர்ப்புற மேம்பாடு, பொது சுகாதாரம் மற்றும் வெப்ப அளவை குறைத்தல் ஆகியவற்றில் தொழில் துறையின் பங்கு போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்து விஞ்ஞானிகள், பொதுப்பணித் துறை, செயற்பொறியாளர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி அதிகாரிகள், நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் அதிகாரிகள், அரசு சாரா நிறுவனங்கள் (NGO) மற்றும் தொழில்துறைப் பிரதிநிதிகள் பங்கேற்று விவாதித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக, சுற்றுச்சூழல் அறிவியல் பேராசிரியர் முனைவர் வீ.தவமணி மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் எஸ்.பால் செபாஸ்டியன் ஆகியோர் ஒருங்கிணைப்பில், வல்லுநர்கள், பல்வேறு துறை சார்ந்த பங்குதாரர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆர்வத்துடன் பங்கேற்று கலந்துரையாடல் மற்றும் நிறைவு அமர்வு நடைபெற்றது.

# மக்காசோள வயல்வெளிப் பள்ளி



பெரம்பலூர், ஆக.29

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் வட்டாரம், அந்தூர் கிராமத்தில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி சார்பில் விவசாயிகளுக்கான மக்காசோள வயல்வெளிப் பள்ளியின் துவக்க விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் துவக்க உரையாற்றிய M.அமுதா, பயிர் பாதுகாப்பு அலுவலர், பயிற்சியை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

இந்த பயிற்சியான துவாரம் ஒரு முறை மக்காசோளத்தில் உள்ள அனைத்து விதமான பயிர் பாதுகாப்பு சார்ந்த பிரச்சனைகள், வயல்வெளிப் பள்ளியின் நோக்கம் மற்றும் பூச்சிக்கொல்லியினால் ஏற்படும் தீமைகள், விதை நேர்த்தி, மண் பரிசோதனை, உர நிர்வாகம், நீர் நிர்வாகம், அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பம் அனைத்தும் விரிவாக விவாதிக்கப்படும் எனக் கூறினார். துவக்க விழாவின் நிறைவில் அபின், தொழில்நுட்ப அலுவலர், பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை ராஜேஸ்வரி, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர், செய்திருந்தார். பயிற்சியில் 35 விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# பயிர்களில் வைரஸ் நோய்கள் - கட்டுப்படுத்தும் முறைகள்

வைரஸ் நோய் வந்த பிறகு குணப்படுத்துவதைவிட, நோய் வராமல் தடுப்பதே சிறந்தவழி!

நெல், பச்சைப்பயறு, உளுந்து, துவரை, பருத்தி, கரும்பு, தக்காளி, மிளகாய், பப்பாளி, வாழை, வெண்டை மற்றும் வெள்ளரி போன்ற பயிர்களில் பல்வேறு வைரஸ் நோய்கள் ஏற்பட்டு மகசூல் இழப்பை ஏற்படுத்துகின்றன.

**வயலில் கவனிக்க வேண்டிய முக்கிய அறிகுறிகள்**

**நெல் – டங்ரோநோய்**

- இலைகள் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறமாக மாறுதல்
- செடி குட்டையாகுதல்
- தூர்கள் குறைதல்

**பச்சைப்பயறு & உளுந்து – மஞ்சள் தேமல் நோய்**

- இலைகளில் மஞ்சள் பச்சைநிற மொசைக் திட்டுகள்
- செடி வளர்ச்சி குன்றுதல்
- பூ மற்றும் காய்பிடித்தல் குறைதல்

**துவரை – ஸ்டெரிலிட்டி மொசைக் நோய்**

- இலைகளில் மொசைக் அறிகுறிகள்
- அதிக கிளைகள் தோன்றுதல்
- பூ மற்றும் காய் உருவாகாமல் மலட்டுத்தன்மை ஏற்படுதல்

**பருத்தி – இலைச்சுருள் வைரஸ் நோய்**

- இலைகள் சுருண்டு காணப்படுதல்
- நரம்புகள் தடித்தல்
- செடி வளர்ச்சி குறைதல்

**கரும்பு – மொசைக் வைரஸ் நோய்**

- இலைகளில் வெளிர் மற்றும் அடர்பச்சை நிற கோடுகள்
- செடி வளர்ச்சி குறைதல்
- தண்டு வளர்ச்சி மற்றும் மகசூல் பாதிப்பு

**தக்காளி – இலைச்சுருள் வைரஸ்**

- இலைகள் சுருண்டு சிறிதாகுதல்
- நரம்புகள் தடித்தல்
- செடி குட்டையாகுதல்
- பூ மற்றும் காய் உற்பத்தி குறைதல்

**மிளகாய் – இலைச்சுருள் வைரஸ்**

- இலைகள் சுருண்டு காணப்படுதல்
- இலைகள் சிறிதாகுதல்
- செடி வளர்ச்சி குன்றுதல்
- காய் உற்பத்தி குறைதல்




**பப்பாளி – ரிங்ஸ்பாட் வைரஸ்**

- இலைகளில் மொசைக்
- இலை வடிவம் மாறுதல்
- பழங்களின் அளவு குறைதல்
- பழங்களில் வளைய வடிவ புள்ளிகள்

**வாழை – பன்சிடாப் வைரஸ்**

- இளம் இலைகள் குறுகி மேல் நோக்கி நிற்றல்
- இலைகள் கொத்து போல தோன்றுதல்
- செடி வளர்ச்சி குன்றுதல்

**வெண்டை – மஞ்சள் நரம்புத் தேமல் நோய்**

- இலை நரம்புகள் மஞ்சள் நிறமாகுதல்
- பின்னர் முழு இலை மஞ்சளாதல்
- காய்கள் சிறிதாகுதல்

**வெள்ளரி – மொசைக் வைரஸ்**

- இலைகளில் மொசைக் திட்டுகள்
- இலை சுருக்கம் மற்றும் வடிவ மாற்றம்
- கொடி வளர்ச்சி குன்றுதல்
- பழங்கள் வடிவம் மாறுதல்

**நோய் பரப்பும் பூச்சிகளைக் கண்காணிக்க வேண்டும்.**

பல வைரஸ் நோய்கள் வெள்ளை ஈ, அசுவினி, தத்துப்பூச்சி மற்றும் த்ரிப்ஸ் போன்ற பூச்சிகளால் ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்கு பரவுகின்றன.

**வைரஸ் நோய்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்**

**1. ஆரோக்கியமான விதை மற்றும் நடவுப்பொருட்களைப் பயன் படுத்துதல்**

- நோயற்ற, சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் நாற்றுகளைப் பயன்படுத்த வேண்டும்.
- நோயுற்ற வயலிலிருந்து நடவுப்பொருட்களை எடுக்கக்கூடாது.

**2. நோயுற்ற செடிகளை அகற்றுதல்**

- வயலைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
- நோயுற்ற செடிகளை வேருடன் பிடுங்கிஅழிக்க வேண்டும்.

● வைரஸுக்கு மாற்று விருந்தோம்பிகளாக இருக்கும் களைகளை அகற்ற வேண்டும்.

**3. பூச்சி நோய் கடத்திகளைக் கட்டுப்படுத்துதல்**

● வயலைத் தொடர்ந்து கண்காணிக்கவும்.

● அசுவினி, வெள்ளை ஈ, த்ரிப்ஸ், தத்துப்பூச்சி போன்றவை பல வைரஸ் நோய்களைப் பரப்புகின்றன.

● பூச்சிகளின் எண்ணிக்கையை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

● மஞ்சள் ஒட்டும் பொறிகளைப் பயன்படுத்தி வெள்ளை ஈ போன்ற பூச்சிகளைக் கண்காணிக்கவும்.

● தேவைக்கேற்ப ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

**4. வயல் சுகாதாரம்**

● வயல் மற்றும் சுற்றுப்புற களைகளை அகற்றவும்.

● நோயுற்ற செடிகளை ஆரம்ப நிலையிலேயே பிடுங்கி அழிக்கவும்.

● அறுவடைக்குப் பின் பயிர்க் கழிவுகளை அகற்ற வேண்டும்.

● நோயுற்ற மற்றும் ஆரோக்கியமான செடிகளுக்கு இடையில் தேவையற்ற தொடர்பைத் தவிர்க்க வேண்டும்.

**5. எதிர்ப்புத்திறன் கொண்ட ரகங்களைப் பயன்படுத்துதல்**

● கிடைக்கும் போது வைரஸ் எதிர்ப்பு அல்லது தாங்கும் திறன் கொண்ட ரகங்களை சாகுபடி செய்ய வேண்டும்.

● வாழையில் வைரஸ் நோய் பிரச்சினைகளைத் தவிர்க்க சான்றளிக்கப்பட்ட வைரஸ் இல்லாத திசு வளர்ப்பு நாற்றுகளை பயன்படுத்துவது முக்கியம்.

**6. கருவிகளைச் சுத்தமாக வைத்தல்**

● கத்தி, கத்தரிக்கோல் போன்ற கருவிகளைச் சுத்தம் செய்து கிருமி நாசினியால் சுத்திகரிக்க வேண்டும்.


● கத்தரித்தல், ஒட்டுக்கட்டுதல் போன்ற பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

**விவசாயிகள் கவனத்திற்கு முக்கிய குறிப்பு**

வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட செடிக்கு பொதுவாக நேரடி குணப் படுத்தும் மருந்து இல்லை. எனவே, நோய் வராமல் தடுப்பது, நோயற்ற விதை/நடவுப் பொருட்களைப் பயன்படுத்துவது, நோயுற்ற செடிகளை அகற்றுவது மற்றும் வைரஸ் கடத்தும் பூச்சிகளைக் கட்டு படுத்துவது ஆகியவையே முக்கிய மேலாண்மை முறைகளாகும்.

நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவோம்; வைரஸ் பரவலைத் தடுப்போம்; மகசூலைப் பாதுகாப்போம்!

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். 82480 80922.***


கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

# விவசாயிகளே சுயமாக, சுலபமாக அடங்கல் பெறலாம் எப்படி? தெரியுமா?



அடங்கல் என்பது முக்கியமான, வருவாய் துறை வழங்கும் ஆவணமாகும். பயிர் காப்பீடு, பயிர் கடன், விளைபொருளை நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய அடங்கல் என்ற சான்றிதழ் விவசாயிகளுக்கு தேவைபடுகிறது.

**அதில் என்ன விபரங்கள் இருக்கு? தெரியுமா?**

ஒரு கிராமத்தில் உள்ள நிலங்கள் மற்றும் அவற்றில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் குறித்து விபரங்களை தெரிவிக்கும் அரசு வருவாய்துறையின் ஆவணமாகும். இந்த சான்றை அந்த அந்த வருவாய் கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலரிடம் வாங்குவது வழக்கமாகும். அந்த ஆவணத்தில் நில உரிமையாளர் பெயர், பட்டா எண், புல எண், உட்பிரிவுகளில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களின் விபரம் நிலத்தின் வகைப்பாடு, (நஞ்சை, புன்செய், தரிசு உள்ளிட்ட விபரங்கள்) பயிர் பருவம் நீர்ப்பாசன ஆதாரம் உள்ளிட்ட அனைத்து விபரங்களும் அடங்கலில் தெளிவாக தெரிவிக்கப்பட்டு இருக்கும்.

**இது எதற்காக பயன்பாடுகிறது?**

விவசாயிகள், வங்கி கடன் பெறவும், பயிர் காப்பீடு செய்யவும், விளைவிக்கப்பட்ட விளைப்பொருட்களை நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யவும் அவசியமாக தேவைப்படும் ஆவணங்களில் அடங்கலும் ஒன்று.

**இதனை எப்படி விவசாயிகள் எளிதாக தாங்களே எடுப்பது?**

தங்களுடைய மொபைல் போனில் ‘நம்ம வயல்‘ என்ற செயலியை பதிவிறக்கம் செய்து, அதனுடைய வாயிலாக தங்களுடைய அடங்கல் எளிதாக பிரிண்ட் அவுட் எடுத்து மேலே குறிப்பிட்ட காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இது மட்டுமல்ல விவசாயிகள் தங்களுடைய அடையாள எண் (FARMER I.D) யும் பதிவேற்றம் செய்யலாம். மேலும் தாங்கள் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களை பருவம் வாரியாக மின்னணு பயிர் கணக்கெடுப்பு (DCS) போன்றவற்றையும் இந்த நம்ம வயல் செயலில் மேற் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும்.

இது குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவே இந்த பதிவை பதிவிடுகிறேன்.

இனி கிராம நிர்வாக அலுவலரை தேடி அலைய வேண்டியதில்லை அடங்கலுக்கா', நம்ம வயல் நம்முடைய மொபைல் போனிலே'.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# நிலக்கடலை பண்ணைப்பள்ளி விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஆக.29

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரம், புன்னம் கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) சார்பில், சிறந்த விவசாய நடைமுறைகள் நிலக்கடலை பண்ணைப்பள்ளி என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான பயிற்சி நடைபெற்றது.

பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் ம.கனிமொழி தலைமை வகித்து, உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விளக்கமளித்தார். விதைச்சான்று அலுவலர் கணேசமூர்த்தி, அங்ககச் சான்று பெறும் முறைகள் குறித்தும், குமரகுரு வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் சோபன் சக்கரவர்த்தி, மண் பரிசோதனை, நிலம் தயாரித்தல், விதை தேர்வு மற்றும் விதை நேர்த்தி குறித்தும் விளக்கினர்.

உதவி விதை அலுவலர் குருமூர்த்தி, தரமான விதை உற்பத்தி மற்றும் விதைப்பண்ணை அமைத்தல் குறித்தும், உதவி வேளாண்மை அலுவலர் சுரேஷ்குமார், வேளாண் மானியத் திட்டங்கள், பயிர் காப்பீடு, வறட்சி மேலாண்மை மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் குறித்தும் எடுத்துரைத்தனர்.

மேலும், புவீனிபு திட்டத்தின் கீழ் நடைபெறும் விவசாயிகள் பயிற்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் கண்டுணர் சுற்றுலா குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கங்கா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சதீஷ்குமார், பூங்கோதை ஆகியோர் செய்திருந்தனர்.

# தலைவாசல் வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு!

## பயிர் கணக்கெடுப்புப் பணியை விரைந்து முடிக்க உத்தரவு!!



சேலம், ஆக.29

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆன்லைன் பயிர் கணக்கெடுப்புப் பணிகள் தீவிர மாக நடைபெற்று வருகின்றன. இப்பணி குகளை மேலும் துரிதப் படுத்தும் நோக்கில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தலைவாசல் வட்டாரத்தில் நேரில் கள ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் ஒரு பகுதியாக, மும்முடி கிராமத்தில் உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் மேற்கொண்டு வரும் துல்லியமான பயிர் கணக்கெடுக்கும் பணியினை இணை இயக்குநர் நேரில் பார்வையிட்டார். கிராம வாரியாக சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களின் விவரங்களை விடுபடாமல் பதிவு செய்வதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். விவசாயிகளின் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தடையின்றிச் சென்று சேர்வதை உறுதி செய்ய இப்பணி மிக முக்கியமானது என்பதால், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் இப்பணியை விரைந்து முடிக்க வேண்டுமென அனைத்து வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கும் அவர் உத்தரவு பிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து, தலைவாசல் வட்டாரத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் மற்றும் பிற திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ள துவரை செயல் விளக்கத் திடல்கள் மற்றும் சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ள விவசாயிகளின் வயல்களை அவர் பார்வையிட்டார். பயிர் பாதுகாப்பு முறைகள், நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் உர மேலாண்மை குறித்து விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன், வேளாண்மை அலுவலர் ஜானகி மற்றும் துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்து பணிகளின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்தனர்.

# திராட்சையில் இருந்து உலர் திராட்சை தயாரிப்பு



தேனி, ஆக.29

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் B.Sc. (Hons.) வேளாண்மை இறுதியாண்டு பயிலும் மாணவர்களான பா.ரோகன், க.கோகுல் சதுர்வேதி, மூ.குணால், பா.ரோஹித் ராஜ், கை.ந.கவுரேஷ், பா.பத்மநாபஹரி மற்றும் சுதிர் ரெட்டி ஆகிய நாங்கள், RAWE (Rural Agricultural Work




Experience கிராமப்புற வேளாண் பணி அனுபவம்) திட்டத்தின் ஒரு பகுதியாக, தேனி மாவட்டம், சின்னமனூர் அருகிலுள்ள வெள்ளை யம்மாள்புரத்தில் திராட்சை விவசாயிகள் மற்றும் பொது மக்களிடையே உலர் திராட்சை (Raisins) தயாரிப்பு மற்றும் அதன் மதிப்புக் கூட்டுதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினோம்.

**உலர் திராட்சை என்றால் என்ன?**

பழுத்த திராட்சைப் பழங்களில் உள்ள நீரை இயற்கையான அல்லது கட்டுப்படுத்தப்பட்ட உலர்த்தும் முறையின் மூலம் குறைத்து தயாரிக்கப்படும் உணவுப் பொருளே உலர் திராட்சை (Raisin) ஆகும். திராட்சையை உலர் திராட்சையாக மாற்றுவதன் மூலம் அதன் சேமிப்பு காலத்தை அதிகரித்து, மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக விற்பனை செய்ய முடியும்.

திராட்சை உற்பத்தி அதிகமாக இருக்கும் காலங்களில் சந்தை விலை குறையும் போது, உலர் திராட்சை தயாரிப்பு விவசாயிகளுக்கு மதிப்புக் கூட்டுதல் மற்றும் மாற்று வருமான வாய்ப்பை வழங்கக் கூடியதாகும்.

**விழிப்புணர்வின் முக்கிய நோக்கங்கள்**

– திராட்சையை மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றுவது குறித்து அறிமுகப்படுத்துதல்.
– அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல்.
– திராட்சையின் சேமிப்பு காலத்தை அதிகரித்தல்.
– வீட்டிலேயே சிறிய அளவில் உலர் திராட்சை தயாரிக்கும் முறையை விளக்குதல்.
– சுகாதாரமான முறையில் உணவுப் பொருட்களை தயாரிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல்.
– விவசாயிகளுக்கு கூடுதல் வருமான வாய்ப்பை ஏற்படுத்துதல்.

**தேவையான பொருட்கள்**

**வீட்டு அளவில் உலர் திராட்சை தயாரிக்கத் தேவையானவை**

1. நன்கு பழுத்த, தரமான திராட்சைப் பழங்கள்
2. சுத்தமான குடிநீர்
3. சுத்தமான வடிகட்டி/துணி
4. துளைகள் கொண்ட உணவு உலர்த்தும் தட்டு அல்லது மூங்கில்/ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தட்டு
5. மெலிதான உணவு பாதுகாப்பான வலை அல்லது முஸ்லின் துணி
6. சுத்தமான காற்றுப் புகாத உணவு சேமிப்புப் பெட்டி

7. தேவைக்கேற்ப உணவு தரமான கையுறைகள்

**வீட்டிலேயே உலர் திராட்சை தயாரிக்கும் முறை**

**1. திராட்சையைத் தேர்வு செய்தல்**

நன்கு பழுத்த, ஆரோக்கியமான மற்றும் அழுகல், பூஞ்சை அல்லது பூச்சி சேதம் இல்லாத திராட்சைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**2. சுத்தம் செய்தல்**

திராட்சைக் கொத்துகளை சுத்தமான நீரில் நன்றாகக் கழுவி, தூசி மற்றும் வெளிப்புற அழுக்குகளை அகற்ற வேண்டும்.

**3. நீரை வடித்தல்**

கழுவிய திராட்சைகளை சுத்தமான துணி அல்லது வடிகட்டியில் வைத்து மேற்பரப்பு நீர் முழுவதும் வடியச் செய்ய வேண்டும்.

**4. உலர்த்துதல்**

திராட்சைகளை ஒன்றோடொன்று ஒட்டாமல், சுத்தமான உலர்த்தும் தட்டில் ஒரே அடுக்காகப் பரப்ப வேண்டும். தட்டின் மேல் உணவு பாதுகாப்பான வலை அல்லது மெலிதான துணியைப் பயன்படுத்தி தூசி மற்றும் பூச்சிகளிலிருந்து பாதுகாக்கலாம்.

**5. சூரிய உலர்த்தல்**

நல்ல சூரிய ஒளி மற்றும் காற்றோட்டம் உள்ள இடத்தில் உலர்த்த வேண்டும். தினமும் திராட்சைகளை மெதுவாகத் திருப்பி விடுவதால் சீரான உலர்த்தல் கிடைக்கும். வானிலை மற்றும் திராட்சையின் அளவைப் பொறுத்து பல நாட்கள் உலர்த்துதல் தேவைப்படலாம். ஈரப்பதம் அதிகமாக இருக்கும் காலங்களில் உலர்த்தும் நேரம் கூடும்.

**6. உலர்ந்த நிலையைச் சரிபார்த்தல்**

திராட்சை நன்கு சுருங்கி, மென்மையாகவும், அதிகப்படியான ஈரப்பதம் இல்லாமலும் இருக்கும் போது உலர்த்தலை நிறுத்தலாம். ஈரமாக இருக்கும் நிலையில் சேமித்தால் பூஞ்சை வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது.

**7. சேமித்தல்**

முழுமையாக குளிர்ந்த பிறகு உலர் திராட்சைகளை சுத்தமான, உலர்ந்த மற்றும் காற்றுப் புகாத உணவுப் பெட்டியில் சேமிக்க வேண்டும். நீண்ட கால சேமிப்பிற்கு குளிர்ந்த, உலர்ந்த இடம் அல்லது குளிர்சாதனப் பெட்டி உதவும்.

**முக்கியமான பரிந்துரைகள்**

– அழுகிய அல்லது பூஞ்சை பாதித்த திராட்சைகளை பயன்படுத்தக்கூடாது.

– உலர்த்தும் தட்டுகள் மற்றும் பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களும் சுத்தமாக இருக்க வேண்டும்.

– திராட்சைகளை நேரடியாக தரையில் பரப்பி உலர்த்தக்கூடாது.

– தூசி, பூச்சி மற்றும் விலங்குகளிடமிருந்து பாதுகாக்க வலை பயன்படுத்துவது நல்லது.

– மழை அல்லது அதிக ஈரப்பதம் உள்ள நேரங்களில் உலர்த்துவதைத் தவிர்க்க வேண்டும்.

– முழுமையாக உலர்ந்த பின்னரே சேமிக்க வேண்டும்.

– நிறம், மணம் அல்லது தோற்றத்தில் மாற்றம் ஏற்பட்ட உலர் திராட்சைகளை உணவாகப் பயன்படுத்தக்கூடாது.

– வணிக ரீதியான தயாரிப்பில் உணவு பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செயல்முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**உலர் திராட்சையின் பயன்பாடுகள்**

**உலர் திராட்சையை பல்வேறு உணவுகளில் பயன்படுத்தலாம்:**

– இனிப்பு வகைகள் மற்றும் கேக்குகள்

– பாயாசம் மற்றும் பொங்கல்

– பிரியாணி மற்றும் சாத வகைகள்

– ரொட்டி மற்றும் பேக்கரி பொருட்கள்

– காலை உணவு மற்றும் சிற்றுண்டிகளில்

– பழக் கலவைகள் மற்றும் உணவு அலங்காரங்களில்

இது இயற்கையான சர்க்கரைகள் மற்றும் சில தாதுக்கள் போன்ற ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது. இருப்பினும், உலர் திராட்சையில் சர்க்கரை மற்றும் கலோரி செறிவு புதிய திராட்சையை விட அதிகமாக இருப்பதால், அளவோடு உணவில் சேர்த்துக் கொள்வது சிறந்தது.

**விவசாயிகளுக்கான மதிப்புக் கூட்டுதல் வாய்ப்பு**

விவசாயிகள் தங்கள் பண்ணையில் கிடைக்கும் தரமான திராட்சையை உடனடியாக சந்தைப்படுத்த முடியாத சூழ்நிலையில், முறையான அறுவடைக்குப் பிந்தைய கையாளுதல் மற்றும் உலர்த்துதல் மூலம் மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்ற முடியும். இதன் மூலம் திராட்சையை நீண்ட காலத்திற்கு பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உருவாகிறது.

சிறிய அளவில் வீட்டுத் தேவைக்காக தயாரிக்கும் போது இயற்கையான சூரிய உலர்த்தும் முறையைப் பயன்படுத்தலாம்.

வணிக அளவில் உற்பத்தி செய்யும்போது சோலார் டிரையர் அல்லது கட்டுப்படுத்தப்பட்ட உலர்த்தும் கருவிகள் பயன் படுத்தப்படுவதால் சுகாதாரம், தரம் மற்றும் ஒரே மாதிரியான உலர்த்தலை மேம்படுத்த முடியும்.

**எங்கள் RAWE கள அனுபவம்**

வெள்ளையம்மாள்புரம், சின்னமனூர், தேனி பகுதியில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம், திராட்சை சாகுபடியுடன் மட்டுமல்லாமல், அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் மற்றும் மதிப்புக் கூட்டுதல் பற்றியும் விவசாயி களுடன் கலந்துரையாடினோம்.

திராட்சையை உலர் திராட்சையாக மாற்றுவதற்கான மூலப் பொருட்கள், சுத்தம் செய்தல், உலர்த்துதல், சேமித்தல் மற்றும் பயன் பாடுகள் குறித்து விளக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி, விவசாயிகளுக்கு தங்கள் விளைபொருளின் மதிப்பை அதிகரிப்பதற்கான புதிய வாய்ப்புகளை அறிந்து கொள்ள உதவியது.

**முடிவுரை**

விளைபொருளை மட்டும் விற்பனை செய்வதை விட, மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றுவது கூடுதல் வருமானத்திற்கான வழி.

திராட்சை போன்ற எளிதில் அழியக்கூடிய பழங்களை முறையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்தின் மூலம் உலர் திராட்சையாக மாற்றுவதன் மூலம், சேமிப்பு காலத்தை நீட்டித்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக பயன்படுத்த முடியும். வெள்ளை யம்மாள்புரத்தில் நடைபெற்ற இந்த யூபுநிசி விழிப்புணர்வு நிகழ்ச்சி, திராட்சை விவசாயத்தில் மதிப்புக் கூட்டுதல் மற்றும் சிறு அளவிலான பதப்படுத்தலின் முக்கியத்துவத்தை விவசாயிகளிடம் எடுத்துச் செல்லும் பயனுள்ள முயற்சியாக அமைந்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# தேனி மாவட்டத்தில் ரூ.6 இலட்சம் மதிப்புள்ள விதைகள் விற்பனை செய்ய தடை

தேனி, ஆக.29

தேனி மாவட்டத்தில் ரூ.ஆறு இலட்சம் மதிப்புள்ள நெல், மக்காச்சோளம் மற்றும் காய்கறி விதைகளை விற்பனை செய்ய தடை விதித்து சிறப்பு விதை ஆய்வு குழுவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

நடப்பு ராபி மற்றும் மானாவாரி பருவத்தில் விவசாயிகளுக்கு தரமான நெல், உளுந்து, பருத்தி, மக்காச்சோளம் மற்றும் காய்கறி பயிர்களின் விதைகள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மாநிலம் முழுவதும் சிறப்பு ஆய்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி விருதுநகர் மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் ராஜேந்திரனின் தலைமையில் விருதுநகர் மற்றும் கோவில்பட்டி விதை ஆய்வாளர்கள் அடங்கிய சிறப்புக் குழுவினர் தேனி மாவட்டத்தில் செயல்படும் 20 தனியார் விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் பொழுது, விதைச்சட்டப்படி விதைகள் விற்பனை செய்ய வழங்கப்பட்ட விதை விற்பனை உரிமங்கள் மற்றும் இதர ஆவணங்களை ஆய்வு செய்தனர். விதைகளை விற்பனை செய்யும் போது விவசாயிகளுக்கு கட்டாயம் விற்பனை இரசீது வழங்க வேண்டும் எனவும், அவ்வாறு வழங்கப்படும் இரசீதில் விவசாயியின் பெயர், ஊர், செல்போன் எண், விதை குவியல் எண், காலாவதி நாள் மற்றும் விவசாயியின் கையொப்பம் உள்ளிட்ட விவரங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தேனி விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தவிர விற்பனைக்கு இருப்பு வைக்கப்பட்டுள்ள விதைக் குவியல்களின் தரத்தை அறிய கொள்முதல் ஆவணங்கள், பதிவேடுகள், தனியார் விதைகளுக்கான பதிவுச் சான்றுகள், விதைப் பகுப்பாய்வு முடிவறிக்க மற்றும் இருப்புப் பதிவேடுகளை ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின் போது விதி மீறல் எனக் கண்டறியப்பட்ட ரூ.6.43 இலட்சம் மதிப்புள்ள 2318 கிலோ கிராம் அளவுள்ள 9 விதைக் குவியல்களை விற்பனை செய்ய விற்பனைத் தடை வழங்கப்பட்டது. இவ்வாய்வின் போது மதுரை மற்றும் தேனி மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் சி.சிங்கார லீனா மற்றும் விதை ஆய்வாளர்கள் உடனிருந்தனர்.

# மண் வள மேலாண்மை தொழில்நுட்ப பயிற்சி



புதுக்கோட்டை, ஆக.29

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாரம், பாண்டிபத்திரம் கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப முகமை மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் 2026-27 ஆம் ஆண்டிற்கான மண்வள மேலாண்மை குறித்து தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு ஆவுடையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் பொறுப்பு சவீதா, தலைமை தாங்கினார். இப்பயிற்சிக்கு முத்துலெட்சுமி, வேளாண்மை துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம், குடுமியான்மலை, கலந்து கொண்டு மண்வள மேம்பாடு பற்றிய கோடை உழவு, சமச்சீர் உரப் பயன்பாடு, ரசாயன உரங் களை குறைத்து அதிக அளவு இயற்கை சார்ந்த உரங்கள் பயன் படுத்தும் முறைகள், மண்ணில் கரிம சத்தை அதிகரிக்க அதிக அளவு தொழு உரங்கள், பசுந்தால் பயிர்கள் பயிரிட்டு மடக்கி உழ வேண்டும், மண்புழு உரங்கள் மற்றும் பண்ணை கழிவுகள் அதிகளவு இடுவதின் மூலம் மண்வளத்தை மேம்படுத்தலாம் என எடுத்துக் கூறினார்.

குடுமியான்மலை மண்பரிசோதனை நிலையத்தில் இருந்து வருகை புரிந்த பாக்கியலட்சுமி, வேளாண் அலுவலர், விவசாயி களிடம் கேட்டுக் கொண்டது,மண் பரிசோதனை அடிப்படையில் தேவையான உரங்களை மட்டும் பயன்படுத்தவேண்டும் தேவைக்கு அதிகமான உரங்களை பயன்படுத்த வேண்டாம், இவ்வாறு அதிகமாக பயன்படுத்துவதால் செலவு அதிகமாகும் மற்றும் மண் வளமும் பாதிக்கப்படும், நெல் பயிர்களுக்கு அதிக அளவு தழைச்சத்து இடுவதை குறைக்க வேண்டும் என விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். ஆவுடையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் (பொ), வேளாண்மை துறையின் மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து எடுத்துக் கூறினார். தற்பொழுது வேளாண் கிடங்கில் உள்ள இருப்புகள் பற்றிய விபரம் விவசாயிகளிடம் தெளிவாக எடுத்துக் கூறினார். துணை வேளாண் அலுவலர் ரவிச்சந்திரன், அனைவருக்கும் நன்றி கூறினார். இப்பயிற்சி ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜகுபர் அலி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் கீர்த்திகா ஆகியோர்கள் செய்திருந்தனர்.

# பயறு வகைகளில் தன்னிறைவு அடைதல் என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி



ஈரோடு, ஆக.29

ஈரோடு மாவட்டம், பெத்த நாயக்கன்பாளையம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி தமையனூர் கிராமத்தில் 28.08.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில், மௌலிதரன், வேளாண்மை அலுவலர், மண் மாதிரி பரிசோதனை, மண் நல மேலாண்மை, சமச்சீர் உரப்பயன்பாடு மற்றும் உரப்பயன்பாட்டு முறைகள், நுண்ணுயிர் பாசன திட்டம் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் பயிற்சியாளர் பிரவீன், பயிறு வகைகளில் தன்னிறைவு அடைதல் பற்றியும், சமச்சீர் உரப்பயன்பாட்டு முறைகள், இயற்கை உரங்கள் பயன்படுத்துவதால் வரும் நன்மைகள், மண் மாதிரி எடுக்கும் முறையை பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். ராஜ்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர் நலத்திட்டங்கள் மற்றும் விவசாய அடையாள எண் பதிவு செய்வதை பற்றி கூறினார். இப்பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா பணியாளர் பிரியங்கா செய்திருந்தனர்.

# வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு மற்றும் வட்டார தொழில்நுட்பக்குழு கூட்டம்

மதுரை, ஆக.29

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் கள்ளிக்குடி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டமும் மற்றும் வட்டார தொழில்நுட்பக் குழு கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டத்தினை அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெ.சந்திரகலா, தலைமையேற்று தொடங்கி வைத்து உறுப்பினர்களிடையே அட்மா திட்டம் பற்றி எடுத்துரைத்தார்.

கள்ளிக்குடி வட்டார துணை வேளாண்மை அலுவலர் பாண்டியன், வேளாண்மைத்துறையில் செயல்படும் மானியத்திட்டங்கள் குறித்து விளக்கினார். கால்நடை உதவி மருத்துவர் ராமச்சந்திரன், கால்நடைத் துறையில் செயல்படும் மானியத்திட்டங்கள் குறித்து விளக்கினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் இந்திரா தேவி, அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். கள்ளிக்குடி வட்டார உதவி வேளாண்மை அலுவலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பகுதிகேற்ற வேளாண்மைத்துறையில் செயல் படுத்தப்படும் மானிய விவரங்களை கூறினார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் உதவி தொழில்நுட்ப மேலாளர் யுவராஜ்குமரன் நன்றி தெரிவித்துக் கொண்டார்.



# சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் குறித்து பயிற்சி

திருவள்ளூர், ஆக.29

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் எல்லாபுரம் வட்டாரத்தில் உள்ள குருவாயல் கிராமத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் என்ற தலைப்பின் கீழ் ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குனர் எல்லாபுரம் அ உமா மகேஸ்வரியின் ஆலோசனையின் கீழ் துணை வேளாண்மை அலுவலர் சிவகுமார் தலைமை தாங்கி பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் பற்றியும் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். இந்த பயிற்சிக்கு சிறப்பு விருந்தினராக திருவள்ளூர் வேளாண்மை உதவி இயக்குனர் எஸ்.ரமேஷ் தர கட்டுப்பாடு கூறுகையில், மண் ஆரோக்கியத்தின் முக்கிய அம்சங்களாக சமச்சீரான உரப் பயன்பாடு என்பது, மண் பரிசோதனைகளின் அடிப்படையில் பேரூட்டச் சத்துக்களையும் நுண்ணூட்டச் சத்துக் களையும் சரியான அளவிலும் விகிதத்திலும் இடுவதாகும். உரப் பயன்பாட்டுத் திறன் (FUE) என்பது, இடப்பட்ட ஊட்டச்சத்துக்களில் எவ்வளவு பயிரால் உண்மையில் உறிஞ்சப்படுகிறது என்பதை அளவிடுகிறது. சமச் சீரான பயன்பாடு, எந்தவொரு ஊட்டச்சத்தும் விடுபடாமல் தாவர வளர்ச்சியைத் தடுக்காமலும் வீணாக் காமலும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம், உரப் பயன்பாட்டுத் திறனை நேரடியாக அதிகரிக்கிறது. சமச்சீரான உரப் பயன்பாடு மண் பரிசோதனை யானது யூகத்தின் அடிப்படையில் அல்லாமல், துல்லியமான உள்ளூர் மண் அறிக்கைகளின் அடிப்படையில் ஊட்டச் சத்துக் களை இடவும். சரியான விகிதங்கள் : நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் (NPK) மற்றும் துத்தநாகம் அல்லது போரான் போன்ற நுண் ணூட்டச் சத்துக்களை சரியான விகிதங்களில் வழங்குவது குறித்தும் பேசினார்.

மேலும் வட்டார துணை வேளாண்மை அலுவலர் ஆ.சிவகுமார் கூறுகையில் ஒருங்கிணைந்த உர பங்களிப்புகள் மண் உயிரினங் களைப் பாதுகாக்க, இரசாயன உரங்களுடன் இயற்கை உரங்கள்

அல்லது உயிர் உரங்களைச் சேர்த்துப் பயன்படுத்தவும். சரியான நேரத்தில் இடுவதால் பயிரின் குறிப்பிட்ட வளர்ச்சி நிலை களுக்கு ஏற்ற ஊட்டச்சத்துக்களை இடவும் குறித்தும் விளக்கி கூறினார். மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சி.பாஸ்கர், உரப் பயன் பாட்டுத் திறன் பற்றியும் ஊட்டச்சத்துக்களில் தாவரம் எடுத்துக் கொண்டு பயன்படுத்திக்கொள்ளும் ஊட்டச்சத்துவின் சதவிகிதம் மேலும் இழப்புக் குறைப்பு குறைந்த ய்ஷீசி என்பது ஊட்டச் சத்துக்கள் நீர் நிலைகளுக்குள் அடித்துச் செல்லப்படுகின்றன அல்லது காற்றில் கலந்துவிடுகின்றன என்பதாகும். குறிப்பிட்ட இடத்தில் இடுதல் உரங்களை மேற்பரப்பில் பரவலாகப் பரப்பு வதற்கு பதிலாக, வேர்ப் பகுதிக்கு அருகில் இடவும். மேலும் பிரித்துக் கொடுப்பதால் நீர் மற்றும் பயிர் உறிஞ்சும் சுழற்சி 1. நைட்ரஜனைப் பிரி களுக்கு ஏற்றவாறு, நைட்ரஜனைப் பிரித்துக் கொடுக்கவும். பசுந்தாள் உரங்களான சணப்பை, தக்கைப்பூண்டு போன்ற பயிர் களை வளர்த்து, பூக்கும் பருவத்திற்கு முன் மண்ணில் உழுதுதல் வேண்டும் என்றும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, அசோட்டோபாக்டர் போன்றவற்றை பரிந்துரைக் கப்பட்ட முறையில் பாதுகாத்தல், அறுவடைக்குப் பின் கிடைக்கும் தாவர கழிவுகளை எரிக்காமல் மக்கச் செய்து மண்ணில் சேர்த்தல் என்றும் தொழில் நுட்பங்களை எடுத்து கூறினார். நுண்ணூட்டச் சத்து உரங்களை துத்துநாகம், போரான், இரும்பு போன்று நுண்ணூட்டச் சத்துகளை இட வேண்டும் என்றும் எடுத்து கூறினார் மேலும் வேளாண் அடுக்ககத்தில் பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்யவும் மேலும் உட்பிரிவுகளை இணைக்காத விவசாயிகள் உட்பிரிவுகளை இணைக்கவும் கேட்டுக் கொண்டார்.

உதவி வேளாண்மை அலுவலர் வ.முருகன், வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் விதை நெல், பச்சைப்பயறு விதைகள் மற்றும் நுண்ணூட்ட உரங்கள் எக்டேருக்கு 12.5 கிலோ மற்றும் அனைத்து பயிர்களுக்கு திரவ உயிர் உரங்கள் (50 சதவிதம் மானியத்தில்) போன்ற இடுபொருட்களின் இருப்பு விபரங்கள் பற்றிக் கூறினார். விவசாயிகள் தங்கள் நிலங்களில் குறைந்த அளவில் நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவதற்கான தொழில் நுட்பங்களான சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்பாசனம் திட்டம் குறித்து எடுத்து கூறினார். வேளாண் கண்காட்சி–யாக உயிர் உரங்கள், நெல், நுண்ணூட் கலவைகள், பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் முக்கியத் வத்தினை பற்றியும் உயிர் உரத்தின் மூலம் விதை நேர்த்த செய்தல் குறித்தும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜெயபிரசாத் எடுத்து கூறினர். மேலும் இந்த பயிற்சிக்கு கருத்துக்காட்சிக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஏற்பாடு செய்திருந்தார்.

# Rithvik Pipe

## 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




### பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**